**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,**
**போச்சம்பள்ளி**

முன்னிலை: திரு. அ.செல்வகுமார், பி.இ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்

2020ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ம் நாள் வியாழக்கிழமை

<u>அசல் வழக்கு எண்.19/2018</u>

முருகன் ... வாதி

(எதிராக)

1. மாணிக்கம்
2. செல்வம்
3. தருமராசன்
4. மார்கண்டன்
5. பழனி
6. ரவி ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு 21.03.2018-ம் தேதியில் இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு பின்னர் 11.02.2020-ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S.R. மாணிக்கப்பிரபு அவர்கள் ஆஜராகியும், 1, 2, 4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. M. ஜெயபாலன் அவர்கள் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாத்தரப்பினராகக் கருதியும், 3-ம் பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் தோன்றாத்தரப்பினராகக் கருதியும், அது சமயம் விசாரிக்கப்பட்ட

சாட்சிகள் மற்றும் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் வாதி தரப்பு வாதத்தைக் கேட்டும் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பின்வருமாறு வழங்கும்.

## தீ ர் ப் பு ரை

1. வாதி இவ்வழக்கை வழக்குசொத்துக்களை 12 சம பாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தை ஒதுக்கி தனி சுவாதீனம் அளிக்க பிரதிவாதிகளுக்கு உத்தரவிடவும், தவறினால் நீதிமன்றம் மூலம் தனி சுவாதீனம் பெற அனுமதியளிக்கவும், 1-ம் எதிர்வாதி 3-ம் எதிர்வாதியுடன் ஏற்படுத்தியுள்ள தானசெட்டில் பத்திரமும், 1, 3 எதிர்வாதிகள் 2-ம் எதிர்வாதிகளின் பெயரில் ஏற்படுத்தியுள்ள கிரய பத்திரமும் 1, 3 எதிர்வாதிகள் இறந்து போன சேகர் பெயரில் ஏற்படுத்தியுள்ள கிரயப்பத்திரமும், சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்யவேண்டியும் தாக்கல் செய்துள்ளார்.

**2. வழக்குரை சுருக்கம்:**

வழக்குசொத்துக்கள் அனைத்தும் ஆதியில் வேடியப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டவை என்றும், அவர் எவ்வித பாராதீனமும் செய்யாது 15 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றும், அவருடைய மனைவி குப்பம்மாள் 10 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார் என்றும், அவருக்கு மாணிக்கம், செல்வம் ஆகிய 1, 2 பிரதிவாதிகளும், இறந்துவிட்ட ஒரு சேகரும் மகன்கள் என்றும், வாதி மற்றும் 5, 6 பிரதிவாதிகளின் தாயார் ராஜம்மாள் மகள் என்றும் கூறுகிறார்.

3. சேகர் திருமணம் ஆகாமல் 6.10.2017-ம் தேதியில் இறந்துவிட்டார் என்றும், ராஜம்மாள் 15.08.2002-ம் தேதியில்

இறந்துவிட்டார் என்றும், ராஜம்மாளுக்கு வாதியும் 4-ம் பிரதிவாதியான வாதியின் தந்தை மற்றும் 5, 6 பிரதிவாதிகளான மகன்களும் வாரிசுகள் என்றும், 3-ம் பிரதிவாதி 1-ம் பிரதிவாதியின் குமாரர் என்றும் கூறுகிறார்.

4. வழக்கு சொத்துக்கள் எவ்வித பாகமும் பிரிக்கப்படாத நிலையில் வாதி தன்னுடைய தாயார் பாகத்தில் 4-ம் பிரதிவாதியை அணுகி பாகம் கேட்டதாகவும், அவர் காலம் தாழ்த்தி வந்ததால் பாரூர் சார் பதிவாளர் அலுவலகம் சென்று பார்த்த பொழுது தான், 1 முதல் 3 பிரதிவாதிகள் சட்டவிரோதமாக ஆவணங்களை உருவாக்கி இருந்தது 09.03.2018-ம் தேதியில் தெரியவந்ததென்றும், மேற்படி சொத்துக்களில் வாதிக்கும் 4 முதல் 6 பிரதிவாதிகளுக்கும் உரிமை உள்ள நிலையில் மேற்படி ஆவணங்கள் செல்லாதவை என்றும், 1 முதல் 3 பிரதிவாதிகளின் செயல்கள் சொத்தை அபகரிக்கும் எண்ணத்தை காட்டுகின்றன என்றும், இதுகுறித்து 4 முதல் 6 பிரதிவாதிகளிடம் எடுத்து கூறியும் அவர்கள் ஒத்துழைக்காததால் அவர்களுடன் கூட்டாக அனுபவிக்க கூடிய சாத்திய கூறுகள் இல்லை என்றும், அதனால் பாகத்திற்காகவும் 1 முதல் 3 பிரதிவாதிகள் ஏற்படுத்திய ஆவணங்கள் செல்லாது என விளம்புகை கோரியும் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார்.

5. இவ்வழக்கின் 1, 2 பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலமும், 4 முதல் 6 பிரதிவாதிகள் நேரில் ஆஜராகியும், போதுமான வாய்ப்பளித்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 3-ம் பிரதிவாதிக்கு முறையான அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு அவர் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

6. வாதி தரப்பில் அவர் தன்னை வா.சா.1 ஆக விசாரணை செய்து அவருடைய தாயாரின் இறப்பு சான்றிதழை வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்துள்ளார். வாதி தன்னுடைய சாட்சியத்தில் வழக்குசொத்துக்கள் முழுவதும் ஆதியில் வேடியப்பன் என்பவருக்கு பாத்தியப்பட்டு அவருக்கு எவ்வித பாராதீனம் ஆவணமும் ஏற்படுத்தாமல் இறந்துவிட்டதாகவும், அவருக்கு 1, 2 பிரதிவாதிகள் ஒரு சேகர் மற்றும் ராஜம்மாள் ஆகியோர் வாரிசுகள் என்றும், சேகர் திருமணம் ஆகாமல் இறந்துவிட்டதாகவும், ராஜம்மாள் 15.08.2002-ல் இறந்துவிட்டார் என்றும், அவருக்கு வாதி மற்றும் 4 முதல் 6 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றும், வழக்குசொத்துக்களை பொறுத்து 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு தனிப்பட்ட உரிமை எதுவும் இல்லாமல் ஆவணங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும், அவை செல்லாது என்றும், தன்னுடைய தாயாருக்கு சேரவேண்டிய பாகத்தை தனக்கு உரிமை உள்ளதாக கூறி இவ்வழக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். அவர் சார்பில் மோசடியாக ஏற்படுத்தியதாக கூறும் 3 ஆவணங்களின் சான்றிட்ட நகல்களையும், 1 முதல் 3 பிரதிவாதிகள் மற்றும் சேகர் ஆகியோரின் பெயரிலுள்ள கணினி சிட்டாக்களையும் குறியீடு செய்துள்ளார்.

7. வழக்குசொத்துக்கள் முழுவதும் தன்னுடைய தாய் வழி தாத்தாவான வேடியப்பனுக்குத் தான் பாத்தியப்பட்டது என்பது நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் எதையும் வாதி தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை. ஆனால் வா.சா.ஆ.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ள ஒரு ராஜமாணிக்கம் என்பவர் வழக்குச் சொத்துக்கள் முழுவதும் ஆதியில் வேடியப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும், அவர் அனுபவித்து வந்த சொத்துக்கள் என்றும், அவர் எவ்வித ஆவணமும் ஏற்படுத்தாமல் இறந்துவிட்டார் என்றும், அதே போல்

சேகரும், ராஜம்மாளும் இறந்துவிட்டனர் என்றும், ராஜம்மாளுக்கும் வழக்கு சொத்தில் உரிமை உள்ளது என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

8. அதே போல் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 26.9.2016-ம் தேதியிட்ட வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 வரையிலான ஆவணங்களின் 1-ம் பிரதிவாதிக்கு மேற்படி சொத்து பட்டா படி பாத்தியபப்ட்டது என்றும், வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4-ல் 1, 3 பிரதிவாதிகளுக்கு பிதுராஜ்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்து என்றும் காணப்படுகிறது.

9. இவ்வழக்கில் வாதி கூறியுள்ள உறவுமுறைகள் குறித்தோ அல்லது வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை குறித்தோ எதிர்க்கும் விதத்தில் பிரதிவாதிகள் தரப்பில் எந்தவொரு எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் ஆதியில் வழக்குசொத்துக்கள் வேடியப்பனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருக்கையில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்குள் ஏற்படுத்திக்கொண்ட ஆவணங்கள் எவ்வித பாகபிரிவினையும் ஆகாமல் செல்லாதது என்று முடிவு செய்யப்படுகிறது. அதனால் வாதி கோரியுள்ள படி பரிகாரங்களை பெற அருகர் என முடிவு செய்யப்படுகிறது.

**10. முடிவாக, வழக்குசொத்துக்களை 12 சம பாகங்களாக பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதிக்கு ஒதுக்கி தனி சுவாதீனம் அளிக்க பிரதிவாதிகளுக்கு உத்தரவிட்டும், தவறினால் வாதி நீதிமன்றம் மூலம் தனி சுவாதீனம் பெற அனுமதியளித்தும்,1-ம் எதிர்வாதி 3-ம் எதிர்வாதியின் பெயரில் 26.09.2016-ம் தேதியில் ஏற்படுத்திய தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண். 1210/2016 சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்தும், 1, 3**

**எதிர்வாதிகள் 2-ம் எதிர்வாதியின் பெயரில் 26.09.2016-ம் தேதியில் ஏற்படுத்திய கிரயப் பத்திரம் ஆவண எண். 1211/2016 சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்தும், 1, 3 எதிர்வாதிகள் இறந்து போன சேகர் பெயரில் 26.09.2016-ம் தேதியில் ஏற்படுத்திய கிரயப்பத்திரம் ஆவண எண். 1212/2016 சட்டப்படி செல்லாது என விளம்புகை செய்தும், செலவுத் தொகையுடன் தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் கணினியில் வடிவமைக்கப்பட்டதை என்னால் பிழை நீக்கி சரி செய்யப்பட்டு 2020-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20 ஆம் நாளான இன்று அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- திரு. அ. செல்வகுமார், பி.இ., பி.எல்.,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நடுவர், போச்சம்பள்ளி.

**<u>இணைப்பு</u>**

**<u>வாதி தரப்பு சாட்சி:</u>**

வா.சா.1 - திரு. முருகன்

வா.சா.2 - திரு. ராஜமாணிக்கம்

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்:</u>**

வா.சா.ஆ.1 - 15.08.2002-ம் தேதியிட்ட வாதியின் தாயார் ராஜம்மாளின் இறப்பு சான்று - அசல்

வா.சா.ஆ.2 - 26.09.2016-ம் தேதியிட்ட 1-ம் பிரதிவாதி 3-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.3 - 26.09.2016-ம் தேதியிட்ட 1, 3 பிரதிவாதிகள் 2-ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.4 - 26.09.2016-ம் தேதியிட்ட 1, 3 பிரதிவாதிகள் இறந்த சேகருக்கு எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் - சான்றிட்ட நகல்

வா.சா.ஆ.5 - 08.03.2018-ம் தேதியிட்ட மாணிக்கம் பெயரிலுள்ள கணிணி சிட்டா ( பட்டா எண்.708)

வா.சா.ஆ.6 - 08.03.2018-ம் தேதியிட்ட சேகர் பெயரிலுள்ள கணிணி சிட்டா (பட்டா 1796)

வா.சா.ஆ.7 - 08.03.2018-ம் தேதியிட்ட செல்வம் பெயரிலுள்ள கணிணி சிட்டா (பட்டா எண்.1797)

வா.சா.ஆ.8 - 08.03.2018-ம் தேதியிட்ட சேகர், செல்வம், தர்மராசன் ஆகியோர் பெயரிலுள்ள கணிணி சிட்டா (பட்டா எண்.1798)

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:** இல்லை.

ஒம்/- திரு. அ. செல்வகுமார், பி.இ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி.

// உண்மை நகல் //